# ஆதி மார்க்க னீதி மொழி

**June 2025**

***இதழ் 47 – ஜூன் மாதம் 2025 வெளியீடு***

***© AMNA Trust, Chennai***



## மூலமந்திரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்னோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்திர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்த பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்த தேசிகேந்திரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

## மகாசங்ஙல்ப மந்திரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் னோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்திருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai June 2025

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே ! பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்துடன் ஆதி மார்க்க னீதி மொழி மின்னணு சஞ்சிகையின் 47ஆவது இதழ் பதினான்கு அவை மற்றும் இரண்டு இசை வகுப்பு நிகழ்வுடன் மாறாத மெய்ம்மணம் கமழ உங்கள் கைகளில் மலர்ந்திருக்கிறது. மெய் மணத்தின் ரகசியம் ஆன்மா, ஆன்மாவின் ரகசியம் அறிவு, அறிவின் ரகசியம் இறைவன், இறைவனின் ரகசியம் அருட்பெருஞ்ஜோதி வடிவு என ஆன்றோர், சான்றோர், பெரியோரும், தன்னை உணர்ந்த தத்துவ ஞானிகளும் அருளியுள்ளனர். அப்படியான அருட்பெருஞ்ஜோதி அருளமுத வர்ஷிப்பை உண்டு பெருகிய குருகுல மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

அரும் பெரும் செயலான தன்னை அறியும் தவமுறையில் நின்று சாதித்து குறை மனத்துப் பிழை ஒதுக்கி பழகித் தேர்ந்த குருகுல அதிபர்களாக என் மக்கள் யாவரும் திகழ்கின்றனர் என்பதற்கு வேதமே சாட்சி. அறிவு, இறைவன், அவரவரின் நாமத்தின் பொருளான ஜீவன், இவற்றை வேத சாட்சியாக சொல்வதையும், பார்ப்பதையும், அறிவதையும், அடிநாதமாகக் கொண்டதே ஆதி மார்க்க னீதி அவை. அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகுத்தி குறுகத் தரித்த குறள் என்பது போல் ஒன்றரை மணி நேர அவை நிகழ்வை, என் மக்கள் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ள பொருள் பொதிந்த பெட்டகமே இந்த மின்னணு சஞ்சிகை. அணு அண்டமாகவும், அண்டம் அணுவாகவும் இருந்த எல்லாண்டு எல்லாண்டு எனும் காலத்தின் ரகசியம் உணர்ந்த என் மக்கள் பெற்ற மெய்ப்பயனே அவர்கள் அறிவுத் தெளிவுடன் வாழும் ஆனந்த வாழ்வு. இந்த சஞ்சிகையை பார்த்து படிக்கும் எதார்த்த உள்ளம் கொண்ட மக்களும் தேவத்தன்மை நிறைந்த பஞ்சாட்சரத்தின் மகிமையை அறிந்து உணர்ந்து நித்திய ஆனந்த வாழ்வில் நிலைபெற்று வாழ எல்லாம் வல்ல பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் போற்றி வணங்கி வாழ்த்துகிறேன்.

நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai 

*வாயில் சுவை உணர்வது மிருகம் - செவியில் சுவை உணர்வோர் தேவர்கள். அவனுக்கு வாய்ச்சுவை தான் தெரியும். செவிச்சுவை தெரியாது. கடைசியில் அவனுக்கு விளக்குமாறும், சாணிச் சட்டியும் உரிய மரியாதையாகவும், னெருப்பே பஞ்ஞணை மெத்தையாகவும் வந்து விடுகிறதே! எங்ஙே அதை மாற்றட்டும் பார்க்கலாம். அவன் செத்தால் பிண னாற்றம் கிளம்புது. அவன் வேதமே அவனை மட்டமாகச் சண்டாளன் என்று சொல்லுது. ஆனால் அதே வேதம் னம்மைப் புகழுது. னம்மைப் பிரியமாகத் தோத்தரித்துக் கூப்பிடுகிறது. அவனைக் கேவலம் பண்ணித் தள்ளுகிறது. வேதச்சட்டம் - தேவ னீதிச் சட்டம் - னம்மைத் தேவன் என்று அழைக்கிறது. அவனை னரன் என்று சொல்லுகிறது. தேவனுடைய சொல்லு னிசமாகுமா? அல்லது பேயனுடைய சொல்லு னிசமாகுமா? அவன் எங்ஙே போகிறான்? னித்திய னெருப்புக்குப் போகிறான். னாம் எங்ஙே போகிறோம்? னித்திய பேரின்ப உலகுக்குப் போகிறோம். தேவதரம் இன்னதென்று தெரியாதவன் எப்படி வேண்டுமானாலும் பேசலாம். அவன் கண் தெரியாத ஒரு குருடனைப் போன்றவன். னரனாக இருந்து பேயாக விளைந்து விட்டான். னரனுடைய விளைவு பேய். அதனால்தான் அந்நக் கேள்வி; வாயில் வந்நதைப் பேசுவது. தேவனுடைய விளைவு னித்திய இன்பம். அதன் பெருமையை, உன்னதத்தை, அவனால் னினைக்கத்தான் முடியுமா?*

***~ சாலை ஆண்டவர்கள்***



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2025 மே மாதம் அவை நிகழ்வுகள் – 2025 ஜூன் மாதம் வெளியீடு

### 01-05-2025 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
### மே தின சிறப்பு அவை
### தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருப்பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
அறம் சார்ந்த செயல் மூலமே, வினை - அதன் தலைவனான மனம் - இவற்றின் மாசு அகன்று மூச்சு லயமாகிய மனோலயம் கைவரவாகும். ஒரு மெய்க்குருவின் அனுபவமான வேதமே அறிவை தேடுவோர்க்கு வழிகாட்டி. அப்படியான வேதப் பொக்கிஷமே ஆதி மார்க்க னீதி அவையின் ஆண்டு மலர். அவரவரின் நாமமாகிய மெய்யான இறை பொருள் மெய்யாக வேண்டும் என்பதற்காக வந்ததுவே சாலை ஆண்டவர்கள் அவதாரம்.

*ஜீவசகோதரர் நாகலிங்கம்:* மெய் ஆசானின் நாத தொனியே மெள்ள மெள்ள மெய்யறிவு உதயம் காட்டி நம் மனதை அறிவாக மாற்றுகின்றது. முத்தொழில் கர்த்தாவாக நீக்கமற எங்கும் நிறைந்த ஏகபராபர இறைவனே அவரவரின் இதயக் கமலத்தில் வீற்றிருக்கும் ஈசன்.

*ஜீவசகோதரர் ஜெய்குமார்:* மனம் அலையாமல் பாதுகாக்கும் செயலே அறமாகிய மெய்ஞானம். உயிருக்கான செயல் அறிந்து சுவாசம் வீணாகாமல் காக்கும் உழைப்பின் மூலம் பிறவிக்கடல் கடப்பவரே உழைப்பாளர்.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* உழைப்பே உயர்வு தரும் எனும் உலகப் பொது மொழியின் படி உயிர் காக்கும் உழைப்பை உணர்த்த ஆசான் வேண்டும். அகர முதலான அமானிதத்தை ஆசான் அருளால் அறியும் போதே பொய்யினுள் இருக்கும் மெய்யை அறிய முடியும். ஐயறிவு வரை உள்ள ஜீவ பேதங்கள் மனுவுக்கு உணர்த்தும் உழைப்பு, விடாமுயற்சி இவற்றை குருவருளால் அறிந்து ஆறாம் அறிவின் உன்னதத்தை உணரும் மெய் உணர்வே உயர்வு தரும்.

**குருபிரான் அருளமுதம்:**
பாடு பட்டேன் பலன் எடுத்தேன் உனக்கும் சொன்னேன் என்பது சாலை ஆண்டவர்கள் திரு வாக்கு. மனம் சும்மா இருந்து சுகம் பெறுவதற்கான மெய்யான பாடே உயர்வைத் தரும். யோக நரசிம்மரின் அமர்ந்த கோல தத்துவமான கேசரி நடை எனும் அகமுக உழைப்பின் மூலம் உயர்வு பெறும் தினமே உழைப்பாளர் தினம்.

குருபிரான் அருள் அமுதமுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

*னானே ஜகத்தெல்லாம். னானே பரமபதம் என்றிவ்விதமான ஞானம் எவரிடத்திலிருந்து உண்டாகிறதோ, அத்தகைய குருவை னமஸ்கரிக்கின்றேன்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

## 03-05-2025 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **ஒத்திரு வாசியில் சத்துரு வொன்றுண்டு...** எனும் பிள்ளைத் தமிழ் பாடலுடன் அவை மலர்ந்தது.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண் 209 - குருபிரான் அருளமுதம்:**
பொது நடத்தரசாக விளங்கும் பேரறிவாளரின் திருனோக்கிற்கு இணங்கி, வைராக்கிய சித்தத்துடன் மெய்ச்செயல் பழகித் தேர்பவர்கள் ஈரேழு பதினான்கு லோகத்திற்கும் அதிபனாகி அழியாப்பதம் அடைகிறார்கள். தன்னறிவில் சாயும் சிற்றறிவு உள்ள யாவரும் சாவு எனும் சவக்குழியில் விழுகிறார்கள்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்* **பரிசுத்த வேதாகமம் ரோமர் 1:23** - தேவனுடைய மகிமை என்பது பரிசுத்த ஆவியின் அழகை குறிப்பது மாத்திரமே ஆகும். மனுவாகிய நாம் அழியாமை பெறவே தேவன் நம்மை சிருஷ்டித்தார் என்ற உள்ளச்சமுடன் வாழ்பவர்களே பூரண வாழ்வை பெறுகிறார்கள். கர்த்தரின் அன்பை பெற்று, மா அம்சம் பொருந்திய ஒளி தேகத்தின் மீது இச்சையுடைய இறைத் தூதர்களே நிர்வாணம் எனும் மோட்ச நிலையை அடைகிறார்கள்.

*ஜீவசகோதரர் குபேர்:* அண்ட பிண்டத்தில் நீக்கமற சர்வ வியாபியாக நிறைந்திருக்கும் இறைவனே அறிவுருவாய் அவதரித்து, தன்னை அண்டி வரும் மக்களின் பக்குவம் பார்த்து அருளமுது ஊட்டி உன்னத மெய்ஞ்ஞான வாழ்வில் குடியேற்றி வைக்கிறார்கள்.

**தௌஹீது காமீல் - குருபிரான் அருளமுதம் :**
எழுத்தறிவித்த இறைவனின் திருக்கரத்தால் எழுதப்பெற்ற வேத வேதாந்தத்தை நாம் எழுத்தறிந்து படிக்க வேண்டும். எதற்கும் முதற் பொருளாகிய குத்தூசுப் புதையலில் இருந்து வெளியாகும் வித்தில்லா வித்து நம் நினைவில் பதிந்து விளைந்து விளைவேறும் செயலே ஜீவதேக தரிசனை. அதைக் கண்ட பெரியோர்களே ஹாமீம் எனும் பதத்தில் அனைவரையும் ஆக்கி வைக்கும் அதீத வல்லபம் உள்ளவர்கள்.
அந்தமுள பிரணவத்தை அறிய வைக்கும் ஆசானின் அருட்கொடை மூலமே ஈராறு வரை கடந்து, பனிச்சிகர சலாசனத்தில் வீற்றிருக்கும் ஜீவனாகிய சிவனை தரிசிக்க முடியும். இயற்கையில் ஏதுமில்லா இறை பொருளை தரிசித்தவர்கள் நித்திய மெய்ஞ்ஞான வாழ்வில் திளைத்தும், மற்றவர்கள் நாடெலாம் ஓடிச் சுற்றி நகல் தெய்வத்தையே தேடி அலைந்து, வாழ்நாள் வீணாக்கி பிறவிச் சுழலிலும் சிக்குகின்றனர். தௌஹீது காமீலாகிய மெய் மகத்துக்களிடம் சரணாகதி அடைவது ஒன்றே இம் மனிதப் பிறவியின் பெரும் பயனை அடைந்து பூரணத்துவம் பெறுவதற்கான ஒரே வழியாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 04-05-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

பரிசுத்த ஆவித்தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் பொற்பாதம் போற்றி, **உருவானது விந்தின்பெயர் குருவானது ஞானம்...** என்ற திருஞானத் தாழிசைப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் தேவ்ஆனந்த்:* வினையால் வந்த மானிட ஜென்மத்தின் அறியாமை அகற்றி அறிவை அறியச் செய்பவரே குருபிரான். அவர்களின் நாதமெனும் திருவாசகமே நம் அகத்தில் இருக்கும் திருவுருவை அறியச் செய்து பிறவாமை அருள்கிறது.


Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் ஜெய்குமார்:* குருவருளால் புலன் பொறிகளை இயக்கும் மனமடங்கி, அகத்தில் இருக்கும் ஆசானை கூர்மதி கொண்டு அறிவதே அடக்கம். மண்ணில் அடங்கிய வித்து விருட்சமாவது போல் குருவின் வாய்மைக்குள் அடங்கி வாழ்வதே அமரத்துவம்.

*ஜீவசகோதரி கவிதா வெங்கட்:* **அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்** என்ற வள்ளுவர் வாக்கின்படி நம் உயிரைப் பாதுகாக்கும் செயல் அருள்பவரே எதார்த்த தேவகுரு. இதனை தனது சத்திய பெருவிண்ணப்பத்தில் வள்ளலாரும் அருளியுள்ளார்.

*ஜீவசகோதரி கலைவாணி புகழ்:* அசலை அறிவிக்க வந்த நகல் வடிவே கோவில்கள். மும்மலம் நீங்கிய நிர்க்குண சமாதி நிலையை **கற்பனை யற்றுக் கனல்வழி யேசென்று சிற்பனை எல்லாஞ் சிருட்டித்த பேரொளி** என்கிறது திருமந்திரம். சன்மார்க்க செயல் அருளும் ஆசானின் நாதமே ஜோதி.

*ஜீவசகோதரர் நேதாஜி:* தனது ஆன்மா இன்னதென அறியும் ஆற்றல் பெற்ற மனு கடவுள் செயல் அறிந்து கருவாசலில் புகாமல் இருப்பதே பிறவாமை. ஆசான் அருளால் நான்கு தேக ரகசியம் அறிந்து அடைவதே நற்கதி.

*ஜீவசகோதரர் அருண்:* அரிய பொருளான அமானிதம் பெற்ற மனுவே, இவ்வுடல் நாமல்ல என அறியும் ஆற்றல் பெற்றவன். உடல் கடந்து உயிர்வழி பற்றி ஆத்ம வீட்டில் ஆட்சி புரியும் ஆண்டவனை அறிய வைப்பது ஆசான் தயவே.

*ஜீவசகோதரர் சுந்தரவடிவேல்:* சிதறும் நம் எண்ணங்களை சீராக்கி அகமுகமாகத் திருப்பி காலம் அற்ற எல்லையில் கலக்க வைக்கும் ஆசானே கலைவாணித் தாய்.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* உணர்ச்சியில் இருந்த நம்மை மெய் உணர்வில் மாற்றி, மேல் நோக்கமான திருவடி சேரச்செய்து னித்தமும் நித்திய வாழ்வில் வாழ வைக்கும் ஆசானின் அருள் அமுதமே அருட் கொடையாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 08-05-2025 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஶ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **ஒத்திரு முத்திரை சின்முத்திரை...** எனும் பிள்ளைத் தமிழ் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
கூரான எழுகூரும் கொண்ட ஏகாட்சரமான இறை பொருளுடன் இரண்டறக் கலந்து வாழும் ஆசீர்பாதம் உள்ளவன் மனிதன் ஒருவனே. மனிதன் தன்னை அறிந்து கொள்ள முக்காலமும் உணர்ந்த ஞானிகள் உண்டாக்கிய தத்துவ ரகசியங்கள் கொண்டதே கோயில்கள். தௌஹீது மக்காம் எனும் இறை பொருளின் சிறப்பை அவரவரிடம் உணர்த்தும் மெய் ஆசானின் நாதம், நரனை மனிதனாக ஆக்குவதற்கே.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் வாக்கியம் எண் 6ன் தொடர்ச்சி - குருபிரான் அருளமுதம்:**
சாலை ஆண்டவர்கள் அருளிய தீத்தண்ணீர் என்பதின் ரகசியம் அறியாமையை விதைக்கும் போலிப் பிரசங்கியரின் நாக்கிலிருந்து வரும் தீதான வார்த்தைகளே. அவரவரிடம் உள்ள நன்மை தரும் நித்திய அறிவான அசல் பொருளை விஸ்வரூபமாக தரிசிக்கச் செய்வதே வாக்மி வள்ளலின் வார்த்தைகள்.



Copyright © AMNA Trust, Chennai

**ஆனந்தக் களிப்பு - குருபிரான் அருளமுதம்:**

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் உபனிடத ரகசியமாக பதினெட்டு பாடல்களில் அருளிய ஆனந்த களிப்பு போல், திருக்கயிலாயப் பரம்பரையில் முன்வந்த அகஸ்தியர், வள்ளுவர், காகபுசுண்டர், காலாங்கி நாதர், கம்பளிசட்டை நாயனார் போக முனிவர் ஆகியோரும் அருளியுள்ளனர். கல்பு, இருதயம், ஜீவாத்மா, பரமாத்மா யாவும் அத்வைதம் என்பதை பழகித் தேறும் மெய் அனுபவத்தால் அறியலாம். அங்ஙமதில் முதன் முதலில் உதித்த பத்து வயது கன்னித் தாயான சின்மயப் பொருள் மீது நாட்டமது அகலாதவரே பெரியோர். அறிவு ஒளியாக, கூற்றினை உதைத்த பாதமாக, நின்று விளங்கும் மூன்றாவது கண் திறந்து ஓவிய மூலக் கனலாய் மேல் மாடமாகிய மெய்வழியில் சார வழி காட்டுவது நிபுணமணி விளக்கான ஆசானின் ஆதம் பாதமே.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 10-05-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் பணிந்து அவை இனிதே மலர்ந்தது.



*ஜீவசகோதரர் கௌதம்:*

சர்வ மதங்களின் அடிநாதமே ஆதி மார்க்க னீதி அவையின் அடிநாதம். ஞான பாதைக்கான சாட்சியே சுருதியாக பெரியோர்கள் அருளிய வேத வேதாந்தம் யாவும். மெய்க்கல்வி பழகி வந்த குருபிரானே கற்றவர்க்கு எல்லாம் அதி கற்றோர். மனித தேக ஆலயத்துள் விளங்கும் உயரிய தத்துவத்தை அறியும் வழியே மெய்வழி. நரனை மனுவாக்கி ஈசனாக்கும் வரை ஆசானின் ஓசை கொண்ட நடனம் ஓய்வதில்லை. ஜீவனின் போக்குவரத்தான தொனியே பெரியோரிடம் னாதமாகவும் மற்றவரிடம் சந்தைக் கூச்சலாகவும் இருக்கிறது. சப்தத்தின் பிறப்பிடமான ஆகாயமே அத்தனின் இருப்பிடமாகும். கலியுகமான மனித மனதை அழிக்க னடக்கும் யுகப்புரட்சியே பிரளயமாக உள்ளது. கோடாகிய அமானிதம் தாங்கி வரும் பெரியோர்கள் கலியனின் மனதை முத்தி எனும் நடனத்தால் சீராக்கி கங்குல் பகலற்ற இடத்தில் னீதியான தலையுகத்தை னடவு செய்கிறார்கள். ஆசானின் அன்பே மனிதனின் சுத்தத்துறை இருதயத்தில் விளங்கும் இறைவனைக் கண்டு தரிசிக்கச் செய்கிறது.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:*

தலையான தலையை அறிய வைக்கும் ஆவிடை எனும் தேவ யோனியே சிறந்த செல்வம். அதுவே ஞானக்கடலாக வரும் குருபிரான் அருளும் நான்கு தேக ரகசியத்தை அறிய உதவுகிறது. நம் அறியாமைக்குள் இருக்கும் அறிவை அறிந்து வெளிக்குள் வெளி கடந்து சும்மா இருந்து சுகம் பெறும் இடமே ஞான ஆகாயப் பெருவெளி. ஆகம விதிப்படி ஞானிகள் அமைத்த திருத்தலங்கள் யாவும் மனு தன்னை அறிய உண்டாக்கிய நகல் வடிவே ஆயினும் இன்று செயலுள்ள ஒரே திருத்தலமாக விளங்குவது ஆதி மார்க்க னீதி அவையின் ஆதி சக்தி வாலைத்தாய் அம்மன் ஆலயமே. நம் பிறவிக் கடல் கடக்க பெரும் மரக்கலனாக வரும் பிறவா முதல்வனே மெய்க் குருபிரான்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.


Copyright © AMNA Trust, Chennai

## 11-05-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

பிரம்மப்பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
காலக் கணக்கு அறியச் செய்து இறவாதிருக்க இம்மெனும் நாத மருந்தருளி, நம் நாமமான ஜீவனை தரிசிக்க வைப்பவரே ஆசான். மனிதனைப் படைத்த நிராதாரமான பராபரத்தின் நகல் வடிவே கோவில் சிற்பங்கள். கோடி சூர்யப் பிரகாசப் பொருளை தன்னுள் அறிவதே தன்னை அறிதல். நம் அசலான வயதை நகலுக்கே செலவு செய்வதால் வரும் தண்டனையே மரணம். ஜீவனெனும் சிரஞ்ஜீவியின் ரகசியம் உணர்ந்தவரே துவிஜன், தேவன், அந்தணன். நம் அறிவை அறிய வைக்கும் ஆசானே துளப வேந்தர்.



*ஜீவசகோதரர் வடிவேலன்:* புறத்தில் பிறந்த வீடு விட்டுப் புகுந்த வீடு செல்லும் கல்யாணமே, அகத்தில் நான்கு படிநிலை கடந்து புகுந்த வீடு விட்டு பிறந்த வீடு செல்லும் திருக் கல்யாணம். இதன் தாத்பர்யமே மீனாட்சி திருக்கல்யாணம். புறச்சடங்கில் புதுமனைப் பிரவேச கோ பூஜை விழாவில் பசுவின் வால் பகுதி முதலில் நுழைவதன் தாத்பர்யம், அகத்தில் ஆசான் அருளால் வாலின் ரகசியமறிந்து காலின் துணையுடன் நம் பிறந்த வீடான சொந்த தேகத்தில் குடியேறும் செயலாகும். சாலை ஆண்டவர்கள் அருளிய ஞான அழைப்பாக ஞான அகவலும், ஆசானிடம் நம் வேண்டுதல் ஞான முறையீடாகவும், அவர் அருளும் மெய், மெய்மண ஞானமாகவும், அதனை சங்கின் மூலம் ஊதி அறிவிக்கும், ஞானச் சங்கு, ஞானக் கொரல் மூலம் ஞான நூல் பொருளறிந்து, அமுத கலைக் ஞான போதம் தனை நாம் உணரலாம். இவ்வேழ் நிலைகளும் கடந்து எட்டாம் நிலையில் எது வேண்டும் எது வேண்டாம் சிங்கா என மெய்ஞானப் பகுப்புப் பாவாக அருளியுள்ளதில் அன்னப்பறவை போல் மெய் பொய் எது எனப் பிரித்தறிந்து நம் சொந்த வீட்டினுள் நுழைந்து திருவோடு இணையும் செயலே திருக் கல்யாணம். பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 15-05-2025 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **மன்னுயி ரனைத்தும் மற்று விண்ணுயிரும்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே உதயமானது.

*ஜீவசகோதரர் குமார்:* மன வழியிலும் அது கடந்த அறிவு நிலையிலும் வாழும் உயிர்களின் தாகம் தீர்த்து தன் விழி போல், உயிர் போல் எண்ணிக் களிப்புறும் பெரியோர்களின் உள்ளம் கடலுக்கு நிகரானது. அவர்களே நம் உயிர் தித்திக்கும் ஆசானாக நம் இருதயத்தில் முத்திரை பதித்து அறிவுக் கடலாக விளங்குகிறார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

**திரு மெய்ஞ்ஞானக் கொரல் திருவாக்கியம் எண் 6ன் தொடர்ச்சி** - *ஜீவசகோதரர் குமார்:* இறைவன் தன் சாயலிலேயே மனுவைப் படைத்தான். ஒரு மொழியாம் குரு மொழியே மறைமொழி எனும் நிறை மொழியாக செயல் அடையாளமாக உள்ளது.

*ஜீவசகோதரர் ரியாஸ்:* **திருக்குரான் – அல்குரான் அத்தியாயம் 97 :** லைலத்துல் கதிர் எனும் இரவு, 1000 மாதங்களுக்கும் மேலான, சிதரத்துல் முன் தஹா எனும் வேர்மேலும் தலைகீழான மனுவின் நிலை மற்றும் காலத்தின் கட்டாயம் குறித்தும் உணர்த்தும் மிகச் சிறந்த நாளாகும். ஒவ்வொரு மதமும் அருளும் சிவராத்திரி, வைகுண்ட ஏகாதசி, எட்டாம் நாள் ரா ஞானஸ்நானம் என்பது அறிவுப் பிரகாசத்தில் மனுவை ஆக்கும் இஸ்லாத்தின் 5 கடமைகளை நிறைவேற்றும் நன்னாளே ஆகும்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* சஞ்சீவி எனும் உயிர் காக்கும் மாமருந்தை 49 வகையாக சிறப்பித்து சாலை ஆண்டவர்கள் அருளிய திருப்பாடலே ஆனந்தக் களிப்பு. ஆட்சியெனும் சிரஞ்சீவி சஞ்சீவியை அறிவதே நித்திய ஆனந்த களிப்பாகும்.

**குருபிரான் அருளமுதம்:**

உயிர்ப்பிக்கும் பொருளான ஜீவனையே சாலை ஆண்டவர்கள் சஞ்சீவியாக பல நாமங்களில் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் பெற்ற சிறந்த மெய் அனுபவங்களுள் ஒன்று தற்கலை பீர் முகம்மது ஒலியுல்லா சன்னதி மற்றும் சுசீந்திரம் கோவில் விஜயமாக சித்ரா பௌர்ணமி தினத்தில் குருபிரானுடன் சென்ற நிகழ்வாகும். உபநிடதத் தெளிந்த ஒளி மலையின் பாத இரகசியம் பற்றி ஆறு நிலைகளாக சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளதை அவரவர் ஆன்மாவினுள் தெரிசிப்பதே நிஜமான களிப்பு.
மும்மூர்த்திகள் கொண்ட தாணுமாலயன் ஆலயத்தில் முதலில் காட்சி தருவது தட்சிணாமூர்த்தியே. கோபுரத்தில் காணும் திருப்பாற்கடல் கடையும் சிற்பத்தின் ரகசியம் கோபுர வாசலாகிய வள்ளல்பிரான் வாயின் தயவின் மூலமே அறிய முடியும். தலை கீழ் மரமான மனுவின் ரகசியம் உணர்த்துவது அனுமன் சிலையின் தலை மீதுள்ள வாலாகும். தன்னை அறியும் தத்துவ ரகசியமே கோயில் அமைப்புகள் என உணர்த்துவது ஆசான் அருள் ஒன்றேயாகும். பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 17-05-2025 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அரண்டிடும டத்தாருப தேசமத ழிம்பென...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* மனு ஜென்ம சாபல்யம் பெற்று சுத்த வைரமணி தேகத்தை அடையும் சன்மார்க்க செயலை அடி நாதமாகக் கொண்டதே ஆதி மார்க்க னீதி அவை. பிறவாமை பெறும் மார்க்கமாக சமயக்குரவர்கள் நால்வர் அருளியதே தாசமார்க்கம், சகமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சன்மார்க்கம். வாளாயுதம் கொண்டு மக்களை நீதி வழி நடத்தி மனதின் மாசகற்றி செல்லும் நாள் சென்றிடாது காக்கும் காருண்ய வடிவே ஆசான். பூமியின் பவப்பாரம் தீர்க்க யுகந்தோறும் நிகழ்வதே குருவின் அவதாரம். ஆசானின் கையகத்தில் ஆன மனுத்தலை யாவும் அன்னாட்டிற்குரிய மகா உன்னதமான வித்து என்பதை ஒவ்வொரு ஜீவனும் உணர வேண்டும்.

*ஜீவசகோதரர் குமார்:* முக்காலம் உணர்ந்த ஞானிகள் இறைவனின் கஜானாவில் இருந்து எடுத்து அருளும் திகட்டாத தெள்ளமுதே வித்தில்லா வித்து. நரன் ஒருவனை தெய்வ நிலைக்கு உயர்த்தும் குருவே, மாதா பிதா குரு தெய்வமாகத் திகழ்கிறார்கள். பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai June 2025

## 18-05-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா

பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **சாங்கு கோள் கடந்த ஞானிக டமக்கும்...** எனும் குருமணிமாலை பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் பார்த்திபன்:* இறைவனை துவைதமாக நினைக்கும் மனதின் மாயக்கூத்தில் இருந்து மக்களை மீட்டு நம் பிறப்பறுக்க உத்தி கூறும் அதிபதியாம் மதிபதியே அவதார புருஷர்கள். அவர்களே நம் எண்ணங்களை மேல் நோக்கமாக மாற்றி அறிவை மிளிரச் செய்கிறார்கள்.

*ஜீவசகோதரி ஜெயலட்சுமி கௌதம்:* மண்ணில் வரும் பிறப்பறுத்து நம் மனக்கவலை தெளிய வைப்பவரே ஞானதேசி. அவரின் செயலுக்கு ஒத்துப்பழகி நெருப்பாறு மயிர்ப் பாலம் கடந்தே ஜீவனை தரிசிக்க முடியும். ஆசானை வெறுக்காமல் நம் மனதை வெறுத்தே மெய்ஞ்ஞானம் பெற முடியும்.

*ஜீவசகோதரி பாரதி பார்த்திபன்:* குருட்டினை நீக்கும் குருவின் துணையுடன் தன் பெரு ஆலயத்தில் செய்யும் தனித்த நற்றவமே கைலாச வாசரின் திருச்சன்னதி அடைவதற்கான வழி. ஐம்புலக் கதவை அடைக்கும் பேரறிவு அருளும் ஞான பண்டிதரின் தயவே நம்மை கைலாயத்தில் சேர்க்கும்.

*ஜீவசகோதரி ஷாகிராபானு:* இஸ்லாம் கூறும் மவுத்தெனும் மண்ணறை வாழ்க்கை, வாழும் காலத்தில் அனுபவிக்கும் அகமியச் செயல் என்பதை ஆதி மார்க்க னீதி அவை மூலமே அறிய முடியும். ஏக நாயகனாம் ஜீவனை தரிசிக்கச் செய்து நம் தலை காக்கும் குருவின் செயலே தான தர்மம். அவர் அருளால் மரண பயம் கடந்து வாழ்வதே சொர்க்கபதி வாழ்வு.

*ஜீவசகோதரர் தேவன்:* ஜீவ தேகத்தில் குடியேறி வாழும் வெற்றி வீர வாழ்வை நம் கையில் தந்து தன்னை அறியும் தவ முறையைப் பழகும் சாகாக் கல்வியைக் கற்பிக்கும் தலமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரி லதா உதயசூரியன்:* ஆசான் அருளால் பொய்யும் மெய்யும் பிரித்தறிந்து நம் கோதறச் செய்வதே சத்சங்கம். அடக்கம் மடக்கி பிடித்து அவ்வாக்கி நம்மை அனந்தனாக ஆக்கி வைக்கும் செயலுள்ள இடமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரர் குமார்:* கோது எனும் குற்றமாகிய வயது வாழ்நாள் வீணாகாமல் காக்க, மனதை அறிவின் வழி செலுத்தவே சபைகளும் சத் சங்கங்களும்.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* அண்ணல் அருளும் அறிவைப் பெறும் அருள் வழி குறுகியும், அல்லல் தரும் அறியாமை வழி விரிந்தும் உள்ளது. ஐவழி விளைவின் அப்பாலான ஆறாம் வழியான ஆசான் அருளும் செய் வழியாம் உய் வழியே மெய்ப் பொருளுக்கு அடைக்கலம் தருகிறது. ஆழ்வார்கள் தரிசித்த 108 திவ்ய தேசமும், அசலான சாளக்கிராம மூர்த்தியையும் நம் அகத்தில் தரிசிக்க செய்து வைணவராக நம்மை ஆக்கி வைப்பவரே மெய்க் குருபிரான். பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

*விகற்பங்ளெல்லாம் போதும்; சர்வத்திற்கும் முடிவு யானே உளன்; சராசர ரூபமான இந்த விசுவமானது என்னிடத்தில் உள்ளது' என்னும் இந்த ரகசியமானது எவரால் எனக்குத் தெரிவிக்கப் பெற்றதோ, அந்தக் குரு ஒருவர்தான் னமஸ்கரிக்கத் தகுந்தவர்.*

***~ குரு கீதை***



*Copyright © AMNA Trust, Chennai* 

## 22-05-2025 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **கற்பக வாசிமே லுற்பனச் சாரி...** எனும் பிள்ளைத் தமிழ் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:** பாரமார்த்தீக ஞானம் அருளும் அருட்குருவின் அமுத வர்ஷிப்பை கூர்மதி கொண்டு அதீத கவனத்துடன் செவி மடுத்து, யோக உணவாக உட்கொண்டவர்களே கற்பக வாசி மேல் சவாரி செய்து மேலாம்பரமான நாலாம் பதம் அடைகிறார்கள்.

**எமன்படர் அடிபடு திருமெய்ஞ்ஞானக் கொரல் - திருவாக்கியம் எண் 6 - குருபிரான் அருளமுதம்:**

மரணமிலாப் பெருவாழ்வைப் பெறும் வழி வகைகளை அருள்வதே வேதம். மனுக்குலத்தினர் அனுபவிக்கும் அறுசுவையில் எவ்வித பேதமுமின்றி உள்ள சமத்துவம் போல், மெய்ஞ்ஞான செம்மல்கள் ஸ்தாபித்த சாதி, மத, வேதங்களும் சமத்துவமாகவே உள்ளன. இவ் உயிரொட்டிய ரகசியத்தை ஆதி மார்க்க நாதரின் அருளாலேயே அறிந்து உணர முடியும்.

**ஆனந்நக் களிப்பு - குருபிரான் அருளமுதம்:**

தத்துவாதீத பரிபூரண புராதனத்தின் பரம இரகசியமே ஆனந்நக் களிப்பு. சஞ்ஞீவி சடாமகுடராக வரும் குருபெருமானின் திருனாவில் இருந்து பிறங்கும் தேவத் திருனடனத்தை தரிசித்த தவசீலர்களே, வேத அறிவின் சுவையை பெற்று ஆனந்த களிப்பு அடைகின்றனர். சர்வத்தையும் னீதியெனும் பொருளான மனுக் குலத்திற்கென படைத்த இறைவன், இயற்கை உண்மையாக இருதயத்துள் உறைந்துள்ளதை உணரும் தருணமே பேரானந்தம். அகமிய ஆகாய கெங்கையில் ஸ்நானம் செய்து, பாவம் நீங்கப் பெற்றவரே தன் நாமத்திற்குரிய பொருளான ஜீவனைக் கண்டு ஜென்ம சாபல்யம் அடைய முடியும். கோடி சூர்யப் பிரகாசம் ஒளிரும் கிளர்மணித் தவிசாகிய ஜீவசிம்மாசனத்தில் வீற்றிருந்து சஞ்ஞீவியில் பொதிந்திருக்கும் பொக்கிஷங்களை வாரி வழங்கிக் கொண்டிருக்கும் வள்ளலின் திருப்பாதம் பணிந்து பரமானந்தத்தில் வாழ்வோமாக!

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 24-05-2025 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்

பரிசுத்த ஆவித் தெய்வம் மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **மாசிலான் மறைப்படியும் எண்ணில் கோடி...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* அசலை உணர்த்த வந்த தத்துவ வடிவங்களே கோவில் சிற்பங்கள். எண்ணில் கோடி மந்திரங்களையும் ஒரு மொழியில் உணர்த்தி பிரகாச ரூபமாக ஆக்கி உயிருடலம் அறிய வைப்பவரே பிரம்மப் பிரகாச ஆசான். அவரருளால் சைதன்யம் எனும் சைவ நிலையில் நற்றாளைக் காணும் கல்வியைப் பழகித் தேறும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.

**குருபிரான் அருளமுதம்:**

அலீபு-லாம்-மீம் எனும் அட்சரத்தை அல்லா தான் அறிவார் எனக் கூறுவோர் மதியை விட்டு வேதம் தவறி விதி வசம் வீழும் நரரே. விழுப்பம் தரும் ஒழுக்கம் உள்ள அறம் சார்ந்த வாழ்வே வினையை வெல்லும். கங்குல் பகலற்ற அத்வைத நிலையில் தான் ஜீவனும் சிவனும் ஒன்றென அறியலாம். புண்ணியத்தில் மேலான புண்ணியம், தான் பெற்ற மெய்யை எதார்த்த உள்ளம் கொண்ட நன் மனத்தினர் யாவரும் அறியும்படி செய்வதே ஆகும்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் வடிவேலன்:* **தோணுமாலயன் வெளியிலேறியே தொழுதிடும் பேரின்பனாள்** என சாலை ஆண்டவர்கள் அருளிய உயிருக்கான ரகசிய தத்துவங்களை உணர்வதற்கான தலமே, தற்கலை பீர் முகமது அப்பா சன்னதியும், சுசீந்திரம் தாணு மாலயன் கோவில் சன்னதியும் ஆகும். மேலும் அக்கோவிலில் வெண் சங்குகளால் ஆன நந்தி, கடலறியா திருவலம்புரிச் சங்கினையும், வசந்த மண்டப கூரையில் அமைந்துள்ள நவக்கிரகங்கள், குருபிரான் அருளும் அனுக்கிரக செயலையும், காதில் துவாரம் உள்ள சிலா வடிவம் ஆசானின் நாத தொனியை செவி மடுத்து தன் பெருவெளியை எட்டும் செயலையும், ஏழிசை தூண்கள் அமானிதத்தையும், பாவை விளக்குகள் மூன்றாவது கண்ணின் ரகசியத்தையும் உணர்த்துவதாக உள்ளன.

**குருபெருமான் அருளமுதம்:**

புராதனக் கோயில்கள் உணர்த்தும் தத்துவப் பொருள் அவரவர் நாமமாக உள்ளதை உணர வேண்டும் என்ற ஆசீர்பாத உரையுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

## 25-05-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்

பரிசுத்த ஆவித் தெய்வம் மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் ஜெயக்குமார்:* நீர்மேல் நெருப்பின் தத்துவமே சக்தியும் சிவனும். ஆசான் அருளால் ஆறாம் அறிவு பெற்ற மனுவே கால தோஷத்தில் இருந்து விடுபெற்று, கங்குல் பகலற்ற இடத்தில் வாழ முடியும். சுத்த ஓர் நினைவே குரு எனும் இரண்டெழுத்து மந்திரமாகும்.

*ஜீவசகோதரி சங்கீதா கார்த்திகேயன்:* மனதால், ஐம்புல நுகர்வால் நாம் அனுபவிக்கும் சிற்றின்பம் யாவும் துன்பமும் சலிப்புமே. ஆசான் அருளும் பிரம்மவித்தையால் மனம் அறிவாக மாறி அனுபவிப்பதே பேரின்பம்.

*ஜீவசகோதரி மோனிஷா:* அவரவரின் ஜீவனே சிவனாக இருக்கும் அத்வைத நிலையை அருள்பவரே பரமகுரு. ஜீவனாகிய சுயம்பிரகாச ஒரு பொருளே பல நிலைகளாகப் பிரிந்து நம் உடலை இயங்கச் செய்வதை நிர்க்குண நிலையில் நின்று அறிந்து வாழ்வதே நித்திய மகிழ்ச்சி தரும்.

*ஜீவசகோதரர் கோபி:* இறைவனின் படைப்பில் மனுவன்றி மற்ற யாவும் அதன் நியதி நெறி பிறழாது வாழ்கின்றன. நரனை மனுவாக்கி அவன் அமானிதக் கடனை உணரச் செய்பவரே குரு பகவான். நீதி பிறழாது வாழும் அவர்களின் அவ் வழியில் நாமும் வாழ்வதே நன்மை தரும் வாழ்வாகும்.

*ஜீவசகோதரர் யுவராஜ்:* குரு அருளும் நாத மருந்தே நம் நினைவும் கவனமும் இயங்கக் காரணமான இறை பொருளை அறியச் செய்து அறிவு வடிவாக்கி நற்கதிக்கு ஆளாக்குகிறது. சென்ற நாளை மீட்டுத் தரும் செயல் உள்ள இடமே ஆதி மார்க்க நீதி அவை.

*ஜீவசகோதரர் ஜீவானந்தம்:* மனிதனின் முதற்கடமை அவரவரின் உகாரப் பொருளை அறிய வைக்கும் குருபிரானைத் தேடி அடைவதாகும். அவர் அருளால் உடல் உயிரை பிரித்தறிந்து நீக்கமற எங்கும் நிறைந்த இறைவனை அவரவரின் அகமுகத்தில் கண்டு தொழுவதே மெய்த்தொழுகை.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:* குருபிரான் தன் அருளால், நாம் இறைவனை அறிய இரக்கத்துடன் அருளும் உளவே பத்தியம். மனுவை ஈசனாக்கும் திருச்சன்னதியில் பரிசுத்த ஒழுக்கமுடன் நடந்து சிந்தை தெளிந்து சிவமாக வாழவும் தன் பெருவெளியில் குடியேறி வாழவும் உத்தி கூற உருவாகும் தலமே சரவண நந்தவனம்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* அவரவரும் தன்னை அறிய வழி காட்டுவது ஆசானின் ஓசை கொண்ட திருநடனமே. இம் எனும் ஊமை மூலத்தில் நம்மை அடங்கச் செய்ய குரு அருள்வதே பத்தியம்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே நிறைவானது.

## 29-05-2025 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் சாலை ஆண்டவர்கள் அருளிய **பரமனே வுருவெடுத்து...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
முக்தி எனும் ஜென்ம சாபல்யம் வாழும் காலத்தில் அடைவதாகும். அடக்கம் மடக்கிப் பிடித்துப் பெறும் பிறவா நிலையே விடுதலை என குருவருளால் தன் அகமறியும் ஆறாம் அறிவை அறிந்தோரே அறிவர். தேகத்தால் பேதமே அன்றி ஜீவனிலும் அறுசுவையிலும் ஆண் பெண் பேதம் இல்லை. இதனை அறியும் போதே சமரசம் சமாதானம் சமத்துவம் உண்டாகும். காற்றைப் பிடித்து காலத்தை கைவசம் ஆக்கி காலனை வெல்லும் புராதனச் செயல் புதுமை மாறாமல் இன்றளவும் னின்று இலங்குவதை அவரவர்க்கும் உணர்த்துமிடம் ஆதி மார்க்க னீதி அவையாகும்.

**திருமெய்ஞானக் கொரல் - திருவாக்கியம் 6ன் தொடர்ச்சி : குருபிரான் அருளமுதம்:**
என் குலம் பெரிது உன் குலம் சிறிது என ஜாதி, மதத்தின் பெயரால் வருவதே பேதம். அவரவர் நாமத்தின் பொருளான ஜீவனை தன் பெருவெளியில் அறிவதே தன்னை அறிதலாகும். சுத்த சைதன்ய நாதர் சொல் ஒரு பொருளினால் அழிந்திடா சூக்குமத்துள் அடங்கி, செத்துப் பழகும் செயலே சன்மார்க்கம்.

**ஆனந்நக் களிப்பு - குருபிரான் அருளமுதம்:**
அவரவரின் சிற்றம்பலப் பொருளான ஜீவனே தனக்குவமை இல்லாதான் தாளாக நம்மை வாழ வைக்கும் சஞ்சீவியாகத் திகழ்கிறது. பிறவாவரம் பெற மனிதனுக்கு தரப்பெற்றதே அமானிதம் எனும் அறிவு மாணிக்கம். அதனை அறியாதவனே அநியாயக்காரன் என்கிறது வேதம். அறியாமையால் விளைந்த நம் அகந்தைக் கிழங்கை அறுத்தெறிந்து சுகந்தமான மெய்யறிவைப் பதிப்பிக்கும் ஆசானிடம், சரணாகதி அடைவதே மெய்வழியின் முதல் தலையுக ஆண்டாகும் என குருபிரான் அருளியதைத் தொடர்ந்து, பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 31-05-2025 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் பணிந்து அவை இனிதே உதயமானது.

*ஜீவசகோதரர் கௌதம்:* இன்றைய காலத்தில் திருஞான சம்பந்தர் அருளிய பாடலின் படி சுடலைப் பொடி பூசி ஒருவர் வந்தால் அவரைக் கண்டு உள்ளம் மகிழாது கேலியே பேசுவர். புறக்கண்ணால் கண்டு அனுபவித்து ருசித்த பொருளே சிந்திக்க வருவது போல், ஆசான் அருளால் மூன்றாவது கண் திறக்கப் பெற்றவரே சாலை ஆண்டவர்களின் தோற்றம் என்பது தூலத் திருமேனி அல்ல அறிவு வடிவு என அறிவர். அடக்கம் மடக்கிப் பிடித்து அனந்தர் ஆகும் செயலுக்கு அந்நாடு சென்று வரும் ஆசான் தயவு வேண்டும். அவரருளால் காலனிடம் இருந்து



Copyright © AMNA Trust, Chennai

விடுதலை பெறும் செயலே முக்தியாகும். ஞானம் என்பது கேட்பதோ படிப்பதோ நம்பிக்கையோ அன்றி வாழ்கின்ற வாழ்வாகும். சன்மார்க்க மரபான சாகாத்தலை, வேகாக்கால், போகாப்புனல் அறிந்து அகரப்பொருளான பாதம் விளங்கியவர்க்கே வேதம் விளங்கும். அவர்களே, குரு வள்ளல் கொடுத்த வா சுகியின் சஞ்ஞீவி கொண்டு ஜீவான்மாவில் கலந்து காலத்தை துறவு பூண்டு சேமநிதி வாழ்வில் குடியேறுவர். மெய் வணக்கத்தின் சூட்சுமமே பெருமாளின் அமர்ந்த நின்ற கிடந்த கோலமாகும். அரவு தன் சட்டை மாற்றும் செயல் போன்ற மகா விஷ்ணுவான அனந்த பத்ம நாபனின் செயலே சில கோவில்களில் சட்டை கழற்றும் சம்பிரதாயம். நற்றாளைக் காட்டிக் கற்பித்து அவரவரின் அகமியமான சொந்த வீட்டில் குடியேற்றி வைக்கும் செயல் கொண்டடதே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

**இசை வகுப்பு**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**18-05-2025 ~ ஞாயிற்றுக்கிழமை**

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **அங்கம திடத்தில் ஐம்புலக் கதவை…** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. ஆதி மான்மியத்தில் **வளர் குழந்தை குமார** பருவத்தில் அருளப்பெற்ற **புகர் சமய ஜகத சத்துவ…** என்ற பகுதி மனனம் செய்து பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

**25-05-2025 ~ ஞாயிற்றுக்கிழமை**

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **கற்பனை கடந்த சஞ்சீவி…** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது. சென்ற வாரம் பயிற்சி அளிக்கப் பெற்ற **வளர் குழந்தை குமார** பருவத்தில் அருளப்பெற்ற **புகர் சமய ஜகத சத்துவ…** என்ற பகுதியே மீண்டும் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

# குரு வா ஆழ்க! குருவே துணை!

*அனேக ஜன்மங்ஙளில் செய்யப்பட்ட பாவத்தினால் (குரு விசேஷமென்றும்) இத் தேவ ரகசிய அறிவிப்பு உருசிக்கிறதில்லை. ஜன்மபந்நம் னிவாரணமாவதற்காக யாரும் எப்பொழுதும் குருவையே அடைய வேண்டும்.*

***~ குரு கீதை***



*Copyright © AMNA Trust, Chennai* 

## மே 2025 மாதம் நடைபெற்ற அவை நிகழ்வுகள்

### 01-05-2025 ~ வெள்ளிக்கிழமை

குருபிரான் **திரு. சாலை ரவி அப்பா** திருமுன்பாக மே தின சிறப்பு அவை சென்னையில் சிறப்பாக நடைபெற்றது.

### 11-05-2025 ~ ஞாயிற்றுக்கிழமை

குருபிரான் **திரு. சாலை ரவி அப்பா** அவர்கள் சிவகாசியில் எழுந்தருளி ஞானதேட்டமுடைய னன் மனத்தினோர்க்கு அருளமுத வர்ஷிப்பு வழங்கினார்கள்.









Copyright © AMNA Trust, Chennai

## 12-05-2025 ~ திங்கள்கிழமை

குருபிரான் **திரு. சாலை ரவி அப்பா** தன் அங்கத்தினர்களுடன் தக்கலை பீர் ஒலியுல்லா அப்பா தர்க்கா மற்றும் சுசீந்திரம் திருக்கோயிலுக்கு விஜயம் செய்தார்கள்.







Copyright © AMNA Trust, Chennai

**14-05-2025 ~ புதன்கிழமை**

குருபிரான் **திரு. சாலை ரவி அப்பா** அவர்களின் ஆசீர்பாதத்துடன் ஜீவசகோதரர் கேசவன்- அனுமணி சிங் அவர்களின் திருமணம் திண்டுக்கல் செந்தா மஹாலில் சிறப்பாக நடைப்பெற்றது.






Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2025 மே மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 62**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**
**Account Number: 50200047470073**
**IFSC: HDFC0000323**
**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Vijayakumar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 47 – Month: June 2025*